


சின்னாளபட்டி அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ.50லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட ஆய்வக கட்டிடத்துடன் கூடிய அலுவலக கட்டிடத்தை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்து பேசினார். அருகில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ரா.செல்வகுமார், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் எம்.பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரிமுருகேசன், ஒன்றிய செயலாளர்கள் ராமன், முருகேசன், சின்னாளபட்டி பேரூர்கழக செயலாளர் மோகன்ராஜ், பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபாகனகராஜ், துணைத்தலைவர், ஆனந்திபாரதிராஜா உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

கொலை நடந்த இரண்டே மணி நேரத்தில் காவல்துறை துரிதமாகச் செயல்பட்டு 4 பேரை கைது செய்துள்ளனர்!

# புழுத்துப்போன பொய்யையே எடப்பாடி பழனிசாமி சொல்லி வருகிறார்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

சென்னை, டிச.22-

கொலை நடந்த 2 மணி நேரத்தில் காவல்துறை துரிதமாக செயல்பட்டு 4 பேரை கைது செய்துள்ளனர். சட்டம் ஒழுங்கு சரி இல்லை என்று வழக்கமான புழுத்துப் போன பொய்யையே எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சொல்லி வருகிறார் என்று சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ட்விட்டர் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் எஸ்.ரகுபதியின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

திருநெல்வேலி மாவட்டம் கீழநத்தத்தைச் சேர்ந்த மாயாண்டி என்பவர் கொலை வழக்கு ஒன்றில் ஆஜராகி திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்திற்கு வரும் வழியில், நீதிமன்றத்திற்கு வெளியே கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் நடந்த போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் கொலையாளிகளை விரட்டி சென்று ஒருவரை மடக்கிப்பிடித்துள்ளனர். காரில் தப்பி சென்ற மற்றவர்களையும் கொலை நடந்த இரண்டே மணி



நேரத்தில் தமிழ்நாடு காவல் துறையினர் கைது செய்துள்ளனர். இதுவரை நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்கொண்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

**சட்டம் ஒழுங்கு குறித்து பேச எடப்பாடிக்கு தகுதி இல்லை!**

இவ்வளவு துரிதமாக செயல்பட்டு கொலையாளிகள் உடனடியாக கைது செய்யப்பட்டதை பொறுக்க முடியாமல், வழக்கம் போல சட்டம் ஒழுங்கு சரியில்லை என்ற புழுத்துப்போன பொய்யை பாடத்தொடங்கியிருக்கிறார் எதிர்கட்சித் தலைவர்.

**பொள்ளாச்சி சம்பவத்தை மறந்து விட்டாரா?**

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது தூத்துக்குடியில் வாழ்வாதார உரிமைக்காக போராடிய அப்பாவி மக்கள்13பேர்சுட்டுக்கொள்ளப்பட்ட கொடூரத்தை; மறுநாள் காலையில் டி.வி.யில் பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என நா கூசாமல் பொய் சொன்ன எடப்பாடி பழனிசாமிக்கு சட்டம் ஒழுங்கு பற்றி பேச எந்த தகுதியும் இல்லை.

சாத்தான்குளம் தந்தை-மகன் அடித்துக் கொலை, பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை, கொடைநாடு கொலை சம்பவம் என பொதுமக்கள் வெளியில் நடமாடவே அச்சப்படும் சூழலில் தமிழ்நாடு தவித்துக்கிடந்ததை மறந்துவிட்டீர்களா பழனிசாமி?

ஒன்றிய அரசின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் அதிமுக ஆட்சியில் குற்றச்செயல்கள் பல்கிப்பெருகிக் கிடந்ததை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. அதன்படி 2020-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 8,91,700 ஆகும். 2022-ஆம் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 1,93,913 என மேலும் குறைக்கப்பட்டுள்ளது. இந்தத் தரவுகளை பார்க்கும் போதே மலைக்கும் மடுவுக்குமான வேறுபாட்டை எவராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியும் ஆனால் ஒருவருக்கு மட்டும் புரியவே புரியாது அவர் தான் பழனிசாமி.

"நகரம் பற்றி எரியும் போது அக்கறையின்றி பிடில் வாசித்து ஆனந்தப்பட்ட நீரோ மன்னனாய்" ஆட்சி நடத்திய பழனிசாமிக்கு தற்போது மக்கள் நலன் பேணும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிடமாடல் ஆட்சியைக் கண்டு பொறாமையும் வயிற்றரெச்சலும் வருவது இயல்பு தான். பழனிச்சாமி அவர்களே கவனம் பொறாமை மன நலத்தை கெடுக்கும், வயிற்றெரிச்சல் உடல்நலத்தை கெடுக்கும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஒ.சிறுவயல் ஊராட்சிக்குட்பட்ட ஒ.சிறுவயல் கிராமத்தில் 19.12.2024 அன்று அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2022–2023ன் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக்கடைக்கான கட்டிடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, பொதுமக்களுக்கு குடிமைப்பொருட்களை வழங்கினார். உடன் தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், ஒ.சிறுவயல் ஊராட்சி மன்றத்தலைவர் குழந்தைவேல் உட்பட பலர் உள்ளனர்.

உலகப் பெருவிழா பொங்கல் திருநாளை அவமதிக்கும் வகையில்

# 'யு.ஜி.சி. - நெட்' தேர்வை நடத்துவதா? உடனடியாக மாற்றம் செய்க!

## ஒன்றிய அரசைக் கண்டித்து – கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் அறிக்கை!

சென்னை, டிச.22-

'உலகப்பெருவிழா' பொங்கல் திருநாளை அவமதிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு வன்மையான கண்டனங்கள் என்றும், "யுஜிசி - நெட்" தேர்வு அட்டவணையில் மாற்றம் செய்க என்றும், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் கீழ் இயக்கும் தேர்வு முகமை (NATIONAL TESTING AGENCY) அறிவித்துள்ள "யுஜிசி - நெட்" தேர்வு அட்டவணையில் தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழா வான பொங்கல் பண்டிகை விடுமுறை நாட்களைக் குறிவைத்து 2025, ஜனவரி 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் 30 பாடங்களுக்கானத் தேர்வுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் தமிழர்களின் பண்பாட்டையும் அவர்களின் உணர்வுகளையும் அவமதிக்கும் செயலாகும்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு சார்பில் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகள் பொங்கல் பண்டிகை விடுமுறை நாள்களில் அறிவிக்கப்படுவது தொடர் கதையாகியுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு கூட பட்டயக் கணக்காளர் (Chartered Accountant) தேர்வு கூட பொங்கல் விடுமுறை நாட்களில் அறிவிக்கப்பட்டது. பிறகு கடும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில் அத்தேர்வு ஒத்தி வைக்கப்பட்டது. அதன் தொட ர்ச்சியாகத்தான் இந்த அறிவிப்பையும் பார்க்க வேண்டியுள்ளது.

**தமிழர்களின் பெருவிழா!**

தமிழர்களின் ஒற்றுமைக்கும், கொண்டாட்டத்துக்கும் அனுகூலமாக விளங்கும் பெருவிழா பொங்கல். "நாம் காணும் பொங்கல் விழா, உலகெங்கிலும் பிறந்து மொழி பயின்று வாழும் மனித குலத்துக்கே பொதுவான விழா! ஆம்! பசிக்கின்ற நல் வயிறு படைத்துள்ள மனித இனம் முழு வதுக்கும் சொந்தமான உலகப் பெருவிழா!" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் போற்றப்படும் உலகப் பெருவிழாவினை ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ச்சியாக அவமரியாதை செய்வதை இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**தமிழ் நாடெங்கும் போராட்டம்!**

மேலும், அறிவிக்கப்பட்ட "யுஜிசி - நெட்" தேர்வு அட்டவணையை உடனடியாக மாற்றம் செய்ய வேண்டும். இல்லையெனில் திராவிட மாடல் முதல்வர், முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று திமுக மாணவர் அணி சார்பில் தமிழ் நாடெங்கும் போராட்டம் நடத்தப்படும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இளைஞரணியினர் கழகத்தின் போர் சிப்பாய்களாக திகழ வேண்டும்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை. டிச.22-

சிவகங்கை மாவட்டத்தில் கழக தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில்இளைஞரணி செயலாளர் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் ஆலோசனையின் பேரில் சிவகங்கை மாவட்ட இளைஞரணி சார்பில் சிவகங்கை, மானாமதுரை, திருப்பத்தூர், காரைக்குடி, ஆகிய 4 சட்டமன்ற தொகுதிக்கான 1364 பாக முகவர்களுக்கான வலைதள பயிற்சி முகாம் மானாமரை, சிவகங்கை, சிங்கம்புனரி, காரைக்குடி ஆகிய ஊர்களில் தனியார் மஹாலில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுத் துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் வரவேற்று பேசினார். மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா பயிற்சி முகாம் குறித்து விளக்கி பேசினார். வலைதள பயிற்சியினை பயிற்சியாளர்கள் அசோக், இளமாறன் ஆகியோர் அளித்தார்கள். இந்த வலைதள பயிற்சி முகாமில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மேயர் எஸ்.முத்துதுரை, திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. நகர் மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி, துணைத் தலைவர் பாலா சுந்தர், நகர்கழக செயலாளர்கள் க. பொன்னுச்சாமி, சி.எம் .துரை. ஆனந்த், பெரி.பாலா, என். குணசேகரன் ,ஒன்றிய கழக செயலாளர் கள் துரை.ராஜாமணி, எம். அண்ணாதுரை, எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், யோக. கிருஷ்ண குமார், நா. நெடுஞ்செழியன் , கே.பாலசுப்பிரமணியன், பூமணி, குன்னக்குடி சுப்பிரமணியன், சுப. சின்னதுரை, கே. எஸ். ஆனந்த், நாகனி ரவி, பூபால சிங்கம் ,லெ.மு. ரவிச்சந்திரன், மாவட்ட



மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே.எம்.பொற்கோ, ஆர். ராஜாசேதுபதி ,கார்த்தி, முகமதுமகாதீர், பரணிக் கிட்டு, எஸ். எம். மதிவாணன்,தொ.மு.ச முருகேசன், தகவல் தொழில் நுட்ப அணி காளிமுத்து, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, நகர்மனற துணைத் தலைவர் எம். கார் கண்ணன், வழக்கறிஞர் ராஜா அமுதன், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் , ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்த வலைதள பயிற்சி முகாமிற்கு தலைமை வகித்த கூட்டுறவுத் துறை அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

இந்த பயிற்சி முகாம் இளைஞர்களுக்கு. மிகவும் பயனுள்ளதாக அமையும் .இதன் முக்கியத்துவம் பயிற்சி தரப்படும்போது அறிய முடிகிறது ..இன்றைய காலகட்டத்தில் வலைதளம் மூலம் பதில் சொல்வது மிகவும் முக்கியமானது ஆகிவிட்டது. இன்றைய சூழ்நிலை யில் நம்மைப் பற்றி குறை கூறுபவர்களுக்கு உடனடியாக பதில் கூற வேண்டி உள்ளது.அதற்கு இதன் மூலம் பதில் கூற முடிகிறது. அதுபோக கழக அரசின் 3 அரை ஆண்டு கால சாதனைகளையும் இதன் மூலம் எடுத்துக் கூறவேண்டும் . இன்றைய தலைமுறையினருக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. புதிய வாக்காளர்களும் இதனை பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் பல்வேறு அரசியல் கட்சிகள் உள்ளது. அதில் தலை சிறந்த இயக்கமாக நமது கழகம் திகழ்கிறது. இந்த கழகத்தில் இளைஞர்கள் நீங்கள் உங்களை இணைத்து கொண்டுள்ளீர்கள். உங்களது வாழ்வு வளமாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கேற்ப உங்களது பணியும் சிறப்பாக அமைந்திட வேண்டும் . பல்வேறு சோதனைகளை சந்தித்து கழகம் இன்று வலுப்பெற்றுள்ளது. ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை ஜனநாயக குரல்வளை நெரிக்கப்படும் போது எதிர்த்து கழகம் குரல் கொடுத்ததால் ஆட்சியை இழந்தது. இது போல் இலங்கை தமிழருக்காக எதிர்த்து குரல் கொடுத்து ஆட்சியை இழந்தது . ஆட்சிக்காக கழகம் துவக்கப்பட வில்லை. எதிலும் கொள்கைகளை விட்டு தராத இயக்கமாக நமது இயக்கம் செயல்பட்டு வருகின்றது . இன்று சிலபேர் கட்சியை துவங்குவதற்கு முன்பாகவே தான் முதல்வர் என்று கூறிக் கொள்கிறார்கள். அண்ணா கழகத்தை துவக்கிய பொழுது சமுதாய சீர்திருத்திற்காக துவக்கினார் .பிறகு அனைவரின் வற்புறுத்தலின் பேரில் 1957 இல் பொதுத்தேர்தலில் கழகம் போட்டியிட்டது . தொடர்ந்து வெற்றியை பெற்று வந்தது. பல்வேறு சாதனைகளை தமிழகத்தில் உள்ள மக்களுக்கு செய்து வந்துள்ளது. பேரறிஞர் அண்ணா மறைவிற்கு பின் தலைவர் கலைஞர் 50 ஆண்டுகளாக கட்சியை சிறப்புடன் நடத்தி வந்தார். கொள்கை மாறாமல் நடத்தி வந்தார். அத்தகைய பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் ஆகியோர் கலந்த கலவையாக தமிழக முதல்வர் தளபதி அவர்கள் விளங்கி வருகிறார்கள். தமிழகத்தில் முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஜாதி, மத, வேறுபாடு இன்றி அனைவருக்கும் பயனுள்ள அரசாக அமைந்து வருகிறது. இதற்கு ஊறு விளைவிக்க ஒரு சிலர் புறப்பட்டு உள்ளார்கள் .அதை இளைஞர் அணியினர் முறியடிக்க வேண்டும் . இளைஞரணியினர் கழகத்தின் போர் சிப்பாயாக பணி புரிய வேண்டும். நம்மை குறை கூறுபவர்க ளுக்கு தகுந்த பதில் கூற வேண்டும் என்பதற்காக இத்தகைய பயிற்சிகள் நடைபெற்று வருகின்றது. இதற்கான அறிவுரை மற்றும் ஆலோசனைகளை வழங்கிய தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மாவட்ட கழகத்தின் சார்பில் பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை இளைஞரணி பாகமுகவர்கள் நன்றாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.



இனமானப் பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்தநாள் முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமான பேராசிரியர் பெருந்தகையார் அவர்களின் திருஉருவப்படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே. ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்வில் கென்னடி,ஷெரிப், முத்துப்பாண்டியன், ஆறுமுகச்சாமி,இராஜேஸ்வரன், பேபி ரசப் பாத்திமா,ராமராஜ், கிட்டு,சேக் பரீத்,ராமதுரை, பால்ராஜ்,கிருஷ்ணராஜா உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் புதுவயலில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அண்ணல் அம்பேத்கர் குறித்து அவதூறாக பேசியதை கண்டித்து சாக்கோட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் சுப.சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேரூர் கழக செயலாளர் பக்ருதீன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கரூர் வை. இரத்தினவேலு**

**டிசம்பர் 22 (2011)**



**அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.**

**கல்லூரிப் படிப்பு முடித்து வெளியே வந்தவுடன் புகளூர் கிளைக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றவர். பின்னர் கரூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இரயில் மறியல் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பெருந்தலைவராகப் பொறுப்பு வகித்தவர்.**

**2002ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் "பெரியார் விருது" வழங்கிச் சிறப்பித்தார்.**

**இவரது இறுதிக்காலம் வரை டி.என்.பி.எல். காகிதஆலை ஒப்பந்த தொ.மு.ச.வின் தலைவராக இருந்து தொழிலாளர் நலனுக்காகவும் போராடியவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**